# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2181/25 - 2020 ජුනි මස 26 වැනි සිකුරාදා - 2020.06.26

*2181/25 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின்***

*3 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் கட்டளை*

*மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகிய நான் 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபை சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத் தத்துவங்களின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களின் அனுமதியுடன் இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மொரகஹகந்தை, களுகங்கை, மகாவலி எப்(கு) வலயத்தை இயற்கை விவசாய உற்பத்திகளில் இருந்து மேற்கொள்ளப்படும் நிலையான அபிவிருத்தி வலயமாக குறித்த சட்டத்தின் கருமங்களுக்காகவும் மற்றும் கீழ்க்காணும் நோக்கங்களையும் அதேபோல் குறித்த கரும பணிகளையும் நிறைவேற்றுவதற்காகவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**நோக்கங்களும் கருமபணிகளும் :-**

*(அ) இயற்கை தாவர வலயமாக இந்த பிரதேசத்தில் விவசாய இரசாயன கிருமிநாசினிகள் நீங்கிய இயற்கை மரக்கறிப் பயிர்களையும், பழப் பயிர்களையும் மற்றும் மேலதிகப் பயிர்களையும் ஊக்குவித்தல்.*

*(ஆ) கற்களைஅடுக்கி, தாவரங்களை வளர்த்து மண்ணை பாதுகாக்கும் முறைகளை பயன்படுத்துவதனூடாக நிலையான மண் பாதுகாப்பை உறுதிசெய்தல்.*

*(இ) வலயத்தினுள் நீர்ப்பாசன நீரை பாதுகாத்தல் மற்றும் நீரை வினைத்திறன் வாய்ந்ததாக பாவித்தல் ஆகியவற்றின் நிமித்தம் நீர் பாதுகாப்பு பயிர்ச் செய்கை முறையை ஊக்குவித்தல்.*


1A-PG 5027 — 267 (2020/06)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஈ) இந்த வலயத்தில் வசிக்கின்ற விவசாய குடும்பங்களின் உணவு மற்றும் போஷாக்கு நிலையை உறுதி செய்தல் இயற்கை பசளை உற்பத்தியை ஊக்குவித்தல் ஆகியவற்றின் நிமித்தம் பயிர்ச்செய்கை, ஒன்றிணைந்த கோழி வளர்ப்பு, பால் மாடு வளர்ப்பு மற்றும் புல் வளர்ப்பு என்பன அடங்கிய பல விவசாய பண்ணை முறையை ஊக்குவித்தல்.

(உ) இந்த வலயத்தினுள் பயிர்ச் செய்கைக்குத் தேவையான இயற்கைப் பசளைகளை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த ஒரு நிலை வரும் வரையில் தேவையான இயற்கை பசளைகளின் அளவுகள் பொருத்தமான முறையியல்கள் பின்பற்றப்பட்டு அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

(ஊ) இந்த வலயத்தில் இயற்கைப் பசளை உற்பத்தியை உறுதிப்படுத்தி நேரடி உற்பத்திகள் மற்றும் பெறுமதி சேர்த்த உற்பத்திகள் என உள்நாட்டுச் சந்தைகளுக்கும் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கும் விநியோகிக்கும் நிமித்தம் அரச மற்றும் தனியார் துறை பங்காளித்துவ நிகழ்ச்சித் திட்டங்களாக செயற்படுத்துதல்.

(எ) அந்த உற்பத்திகளை ‘மகாவலி நக்ல்ஸ் இயற்கை உற்பத்திகள்’ என்ற பெயரில் உள்நாட்டுச் சந்தைகளுக்கும் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கும் விநியோகித்தல்.

(ஏ) இந்த விவசாய குடும்பங்களினது வீட்டுத் தோட்டங்களில் மரக்கறிப் பயிர்களையும் மற்றும் குறை பயன்பாடுடைய பழப் பயிர்களையும் ஊக்குவிப்பதனூடாக அத்தகைய பயிர்களை அழியாமல் பாதுகாத்து தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல்.

(ஐ) இயற்கைப் பயிர்களுக்கு ஏற்படும் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இரசாயனப் பதார்த்தங்களை உபயோகிக்காமல் ஒன்றிணைந்த பீடை கட்டுப்பாட்டு முறைகளை ஊக்குவித்தல்.

(ஒ) இந்த வலயத்தில் பீடை நாசினி, கிருமி நாசினி, களை நாசினி விற்பனை நிலையங்களை நிருவகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஓ) இந்த இயற்கை பயிர் உற்பத்தி வலயத்தை ஒரு விவசாய சுற்றுலா (agro tourism) வலயமாகவும் மற்றும் இயற்கைப் பயிர்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு மாதிரி வலயமாகவும் அபிவிருத்தி செய்தல்.

(ஔ) இந்த வலயத்தில் காணப்படும் நீர்ப்பாசன நீரை ஒரு விஷேட அனுமதி இன்றி எந்த ஒரு கைத்தொழில் நடவடிக்கைக்கும் வழங்காதிருத்தல்.

(க்) அந்தந்த கமக்காரர் அமைப்புகளுக்குத் தேவையான விவசாயம் சார்ந்த ஆலோசனைகளையும் மற்றும் சிபாரிசுகளையும் வழங்கும் நிமித்தம் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் விவசாயத் திணைக்களத் தொழில் நுட்ப உதவியுடன் தேவையான முகாமைத்துவம் சார்ந்த ஒரு இயக்கச் செயற்பாட்டு பொறி முறையை தயாரித்தல்.

**சமல் ராஜபக்ஷ,**
மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர்

மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு,
இலக்கம் 80/5, ‘கொவிஜன மந்திரய’
ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல,
2020, யூன் 16.

**அட்டவணை**

விஷேட வலயத்தின் எல்லைகள் பின்வருமாறு:

மொரகஹகந்தை களுகங்கை அபிவிருத்திக் கருத் திட்டத்தின் கீழ் களுகங்கை நீர்த்தேக்கத்தின் இடது கரை கால்வாய் மற்றும் வலது கரை கால்வாய் ஆகியவற்றின் ஊடாக நீர் கிடைக்கும் தோரப்பிட்டிய குளத்தின் கீழ் FC1/BR தோரப்பிட்டிய, FC1/D4/BR, தோரப்பிட்டிய FC1/ D5/ BR தோரப்பிட்டிய, FC2/D5/BR தோரப்பிட்டிய ஆகிய கால்வாய் முறைமைகளின் கீழ் அபிவிருத்தி அடையும் 88 ஆம் இலக்க வயல் காணித்துண்டு தவிர புதிய விவசாய காணிகள் அடங்கிய 3600 ஹெக்டேயர் அளவான கீழ்க்காணும் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரதேசம் ;

வடக்கு எல்லை:-

*இடத் தொகுதி எண்கள் 74230வ 503392கி, 574279வ 503735கி, 574307வ 504016கி, 574475வ 504506கி, 574542வ 504733கி, 574895வ 504975கி, 575120வ 505324கி, 575308வ 505567கி, 575370வ 505774கி, 575418வ 505967கி, 575348வ 506278கி, 575370வ 506503கி, 575301வ 506737கி, 575223வ 506916கி,575217வ 507144கி, 575402வ 507136கி, 575499வ 507243கி, 575676வ 507364கி, 575888வ 507353கி, 576116வ 507360கி, 576231வ 507377கி, 576339வ 507488கி, 576497வ 507546கி, 576582வ 507684கி, 576443வ 507811கி, 576434வ 507873கி, 576519வ 507926கி, 576580வ 508040கி, 576694வ 508074கி, 576878வ 508103கி, 577016வ 508166கி, 577043வ 508265கி, 577244வ 508315கி, 577273வ 508486கி, 577351வ 508641கி, 577486வ 508748கி, 577395வ 508946கிகளுகங்கை சந்திக்கும் இடம் வரையும்,*

*கிழக்கு/தெற்கு எல்லை:-*

*வட எல்லையின் கடைசியிலிருந்து களுகங்கை ஊடாக வரும் இடத் தொகுதி எண் 570483வ 507739கி, சந்திக்கும் இடம் வரையும், அவ்விடத்திலிருந்து இடத் தொகுதி எண்கள் 570172வ 507855கி, 569941வ 508051கி, 569843வ 508317கி, 569685வ 508660கி, 569624வ 509500கி சந்திக்கும் இடம் வரையும் மற்றும் அந்த இடத்திலிருந்து களுகங்கை நீர்த்தேக்க தென் கரை கால்வாய் முடிவடையும் இடம் வரையும், அவ்விடத்திலிருந்து அந்த கால்வாய் ஊடாக களுகங்கை நீர்த்தேக்கத்தின் சந்தலி அணைக்கட்டு சந்திக்கும் இடம் வரையும், அந்த இடத்திலிருந்து களுகங்கை நீர்த்தேக்கத்தின் கிழக்கு எல்லையின் உச்சநீர் மட்டத்தை காட்டும் சம உயரக் கோட்டின் ஊடாக அந்த நீர்த்தேக்கத்தின் பிரதான அணைக்கட்டு சந்திக்கும் இடம் வரையும், அவ்விடத்திலிருந்து அந்த அணைக்கட்டு ஊடாக சென்று இடதுகரை கால்வாய் ஆரம்பமாகும் இடம் வரையும்,*

மேற்கு எல்லை:-

*கிழக்கு மற்றும் தெற்கு எல்லைகள் முடிவடையும் இடத்திலிருந்து இடதுகரை கால்வாய் ஓரமாக இடத் தொகுதி எண் 572606வ 503820கி சந்திக்கும் இடம் வரையும், அவ்விடத்திலிருந்து இடத் தொகுதி எண்கள் 572870வ 503878கி, 573262வ 503863கி, 573286வ 503950கி, 573638வ 504147கி, 573922வ 504055கி, 573824வ 503754கி, 573938வ 503393கி வரையும் அவ்விடத்திலிருந்து வடக்கு எல்லை ஆரம்பமாகும் இடம் வரையுமான பிரதேசம்.*

*07-172*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.